# களிமண் இதயம்

எனக்குத் தெரிந்த ஒரு சிலரைப் போல்
தங்கத்தாலான ஒரு இதயம்
எனக்கு இருக்குமானால்
உடனே அதனை விற்றுவிட்டு
வடக்கு நோக்கிப் போய்விடுவேன்.
ஆனால் என்னிடம்
தங்கத்தாலான ஓர் இதயம் இல்லை.
அது செம்பினால் ஆனது கூட இல்லை.
அது ஒரு சாதாரண ஜியார்ஜியா நாட்டுக்
களிமண்ணால் செய்யப்பட்டு இருக்கிறது.
சிவப்புக் களிமண் ஏன் இவ்வளவு
சிவப்பாக இருக்கிறது?
நான் வியக்கிறேன்.
எனக்கு "ஆமாமடா" என்று வருகிற பதில்
உங்களுக்கு மட்டும்
"ஆமாம் ஐயா" என்று வருவது ஏன்?
நான் வியக்கிறேன்.
ஏன் இந்த தாழ்ந்த தென்பகுதி
தாழ்ந்தே கிடக்கிறது?
ஏன் எப்போதுமே தலைதூக்கவில்லை?
நான் வியக்கிறேன்.



லாங்ஸ்டன் ஹ்யூக்ஸ்

— தமிழில் இந்திரன்